# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Term Examination - 2021

FWC

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கணக்கீடு I | | Two Hours | 33 | T | I |
| Accounts I | | Gr -13 (2021) | | | |

**அறிவுறுத்தல்கள்:-**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிகோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.

**சுட்டெண் :....................................**

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 – 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

### பகுதி – I

01. பின்வரு கூற்றுக்களில் மிகச் சரியானது/ சரியானவை எவை?

A – நிதிக் கணக்கீட்டின் பிரதான நோக்கம் அக்கறையுடைய தரப்ப்பினர் தீர்மானம் எடுப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குகின்றது.

B – கணக்கீட்டு அலகு என்பது கணக்கீட்டை தயாரிக்கும் தனிநபர், நிறுவனம் அல்லது அரசு ஆகும்.

C – கணக்கீடானது நிதிக் கணக்கீடு, கிரயக் கணக்கீடு எனும் இரு பிரதான பிரிவுகளை கொண்டது.

1) A. B 2) A. C 3) A மாத்திரம் 4) A.B.C ஆகியன 5) B. C

(……….)

02. சகானா நிறுவனத்தின் 31.1.2021 இல் முடிவடைந்த மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய இறுதிக் கணக்கீட்டுச்சமன்பாடு கீழ்வருமாறு.

| சொத்து | = | உரிமையாண்மை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 280 000 | | 180 000 | | 100 000 |

மேற்படி சமனபாடு பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் பின்வரும் பிழை தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன

A – 31.3.2021 முடிவடைந்த முதல் காலாண்டுக்கு ஜனவரி மாதத்தில் செலுத்திய ரூ 12000 வாடகை முழுவதும் ஜனவரி மாத செலவாக பதியப்பட்டுள்ளது.

B – 31.12.2021 முடிவடையும் நிதியாண்டுக்கான பெறுமானத்தேய்வு ரூ 6000 முழுவதும் ஜனவரி மாத செலவாக பதியப்பட்டது.

C – ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற உட்திரும்பல் ரூ 3000 ஏடுகளில் பதியப்படவில்லை இதன் கிரயம் ரூ 2000 மேற்படி பிழைதவறுகள் சீராக்கப்பட்ட பின்னர் சரியான இறுதிக் கணக்கீட்டுச் சமன்பாடு யாது?

| | சொத்து = | உரிமையாண்மை + | பொறுப்பு |
|---|---|---|---|
| 1) | 278000 | 162000 | 116000 |
| 2) | 296000 | 178000 | 118000 |
| 3) | 292500 | 192500 | 100000 |
| 4) | 284500 | 192500 | 92000 |
| 5) | 244500 | 162500 | 82000 |

(……….)

❖ புத்தகசாலையை நடாத்தும் தீபன் நிறுவனத்தில் *2021* ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் வருமாறு. இது VAT பதிவு செய்யப்பட்ட நிறுவனம்.

- ரூ *150000* கிரயமான புத்தகங்கள் 11% VAT உள்ளடக்கி ரூ *222000* கடனுக்கு விற்கப்பட்டது.
- 11% Vat உள்ளடக்கிய கடனுக்கு புத்தககொள்வனவு ரூ *88800*
- 11% Vat உள்ளடக்கிய *1.1.2021* இல் தளபாடக் கடன் கொள்வனவு *111000*
- தளபாடத்திற்கான வருடாந்த 12% பெறுமானத்தேய்வு

❖ **மேற்படி தரவுகளிலிருந்து 3ம் 4ம் 5ம் வினாக்களுக்கு விடை தருக.**

*03.* மேற்படி தகவல்களை முறையே பதிவு செய்வதற்கு பயன்படுத்தம்படும் பொருத்தமான மூலஏடுகள் எவை?

*1)* விற்பனைநாளேடு, கொள்வனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு
*2)* விற்பனைநாளேடு, கொள்வனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு.
*3)* விற்பனைநாளேடு, கொள்வனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு, பொதுநாட்குற்ப்பேடு
*4)* காசுப்பெறுவனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு
*5)* விற்பனைநாளேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு. (……….)

*04.* மேற்படி கொடுக்கல் வாங்கல்களினால் ஜனவரி மாதத்திற்கான இலாபம் யாது?

*1)* ரூபா *38000* *2)* ரூபா *49000* *3)* ரூபா *99000* *4)* ரூபா *83000* *5)* ரூபா *79000* (……….)

*05. 31.1.2021* இல் VAT கணக்கின் இறுதி மீதி யாது?

*1)* ரூ *22000* செலவு *2)* ரூ *2200* வரவு *3)* ரூ *13200* செலவு
*4)* ரூ *11100* வரவு *5)* ரூ *2200* செலவு (……….)

*06.* நிறுவனம் ஒன்றில் இடம்பெறும் கணக்கீட்டு செய்முறைகள் வருமாறு

A – காசுப்பெறுவனவு நாளேட்டில் பதிதல்
B – காசு விற்பனை
C – பற்றுச்சீட்டு தயாரித்தல்
F – விற்பனைக் கணக்கு
E – வருமானக்கூற்று தயாரித்தல்

சரியான ஒழுங்கில் வரிசைப்படுத்துக.

1) CAEDB 2) BCAED 3) DCAEB 4) BCADE 5) BACDE (……….)

❖ **1.5.2020 இல் ஆரம்பித்த சேயோன் நிறுவனத்தின் மே, யூன் மாதங்களுக்கான தகவல்கள் வருமாறு காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டவை**

| | **யூன்** | **மே** |
|---|---|---|
| காசுப்பெறுவனவகளின் மொத்தம் | *245000* | *132000* |
| காசுக் கொடுப்பனவுகளின் மொத்தம் | *185000* | *92000* |

வங்க்கூற்றலிருந்த எடுக்கப்பட்டவை

| | **யூன்** | **மே** |
|---|---|---|
| மாற்றப்பட்ட காசோலைகள் | *172000* | *84000* |
| வசூழிக்கப்பட்ட காசோலைகள் (நேரடி வைப்பு தவிர) | *240000* | *125000* |
| நேரடிவைப்பு | *12000* | *8000* |
| வங்கிக் கட்டனம் | *2000* | *1000* |

❖ **மேற்படி தரவிலிருந்து 7ம் 8ம் வினாக்களுக்கு விடை தருக.**

07. யூன் மாதத்திற்கான மாற்றப்படாத வசூழிக்கப்படாத காசோலைகள் எவை?

| | **மாற்றப்படாத காசோலை** | **வசூழிக்கப்படாத காசோலை** |
|---|---|---|
| 1) | ரூபா 13000 | ரூபா 5000 |
| 2) | ரூபா 21000 | ரூபா 12000 |
| 3) | ரூபா 8000 | ரூபா 7000 |
| 4) | ரூபா 12000 | ரூபா 21000 |
| 5) | ரூபா 13000 | ரூபா 8000 |

(……….)

08. மே மாத திருத்திய காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியம் யூன் மாத வங்கிக்கூற்று மீதியும் யாது?

| | **திருத்திய காசுக் கட்டுப்பாட்டு மிதி** | **வங்கிக்கூற்றுமீதி** |
|---|---|---|
| 1) | ரூ 40000 | ரூ 49000 |
| 2) | ரூ 47000 | ரூ 56000 |
| 3) | ரூ 47000 | ரூ 49000 |
| 4) | ரூ 40000 | ரூ 126000 |
| 5) | ரூ 47000 | ரூ 126000 |

(……….)

09. பின்வரும் கூற்றுக்களில் **சரியான** கூற்றை தெரிவு செய்க.

A – விற்பனை மீதான VAT ஒரு சென்மதி ஆகும்.

B – எல்லாக் கடன் விற்பனைகளும் விற்பனை நாளேட்டில் பதியப்படும்

C – மூல ஏடுகளில் இடம்பெறும் வழுக்கள் பரீட்சை மீதியின் சமத்தன்மையை பாதிக்காது

D – பெறுமானத்தேய்வு வருமானக்கூற்றில் செலவாக காட்டப்படுவதற்கு அடிப்படையாக அமைவது இணைத்தல் எண்ணக்கருவாகும்.

1) ABC 2) ABCD 3) AB மட்டும் 4) D மட்டும; 5) ACD (……….)

10. பின்வரும் விடங்களுக்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கருக்கள் எவை?

A – ஆண்டு காலத்தில் கொள்வனவுசெய்யப்பட்ட பண்டங்களின் ஒரு பகுதியை செலவாகவும் மிகுதியை இருப்பாகவும் கருதல்

B – இருப்புக்ள் கிரயம், தேறக்கூடிய பெறுமதி இவற்றுள் குறைந்த பெறுமதியில் மதிப்பிடுவதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கரு

D – குத்தகைச் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டுவதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கரு

1) பாதுகாப்பு எண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு, கால எண்ணக்கரு
2) இணைத்தல் எண்ணக்கரு, பாதுகாப்பு எண்ணக்கரு, சட்முரன் எண்ணக்கரு
3) பாதுகாப்பு எண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு, கால எண்ணக்கரு
4) கிரய எண்ணக்கரு, இணைத்தல் எண்ணக்கரு, தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு
5) பாதுகாப்பு எண்ணக்கரு, தேறல் எண்ணக்கரு, கால எண்ணக்கரு (……….)

❖ **உற்பத்தி வணிக முயற்ச்சியில் ஈடுபடும் சுயன் நிறுவனதின் 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.**

| | |
|---|---|
| விற்பனை | ரூ 420000 |
| மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட குறைவு | ரூ 18000 |
| முடிவுப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு | ரூ 12000 |
| உற்பத்தி மேந்தலை | ரூ 38000 |
| நேர்கூலி | ரூ 18000 |

குறைவேலை இருப்பு எதுவும் காணப்படவில்லை நிறுவனம் கிரயத்தில் 20% மொத்த இலாபம் பெறக்கூடிய வகையில் விற்பனை செய்கின்றது.

❖ **மேற்படி தரவுகளில் இருந்து 11ம் 12ம் வினாக்களுக்கு விடை தருக.**

11. 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான உற்பத்திக்கிரயம் மூலக்கிரயம் என்பன யாது?

| | உற்பத்திக் கிரயம் ரூ | மூலக்கிரயம் ரூ |
|---|---|---|
| 1) | 380000 | 342000 |
| 2) | 374000 | 336000 |
| 3) | 362000 | 324000 |
| 4) | 350000 | 312000 |
| 5) | 372000 | 318000 |

(……….)

12. 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மூலப்பொருள் கொள்வனவும், மாற்றல் கிரயமும் என்பன யாது?

| | மூலப்பொருள் கொள்வனவு ரூ | மாற்றல் கிரயம் ரூ |
|---|---|---|
| 1) | 276000 | 42000 |
| 2) | 270000 | 36000 |
| 3) | 368000 | 82000 |
| 4) | 306000 | 74000 |
| 5) | 288000 | 56000 |

(……….)

❖ **வரையறுத்த சாய் கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைந்ந நிதியாண்டுக்கான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ 74000 பட்டியல் மீதி உடன்படவில்லை காரணங்கள் வருமாறு.**

- உட்திரும்பல் நாளேடு ரூ 1000 கூட்டிக்கூட்டப்பட்டது.
- ஏதிர்மாற்றல் ரூ 2000 கடன்பட்டோன் பேரேட்டில் ரூ 200 என பதியப்பட்டது. எனினும் பொதுப்பேரேட்டில் சரியாக பதியப்பட்டது.
- மறுக்கப்பட்ட காசோலை ரூ 3000 பொதுப் பேரேட்டிலுள்ள கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கில் பிழையான பக்கத்தில் பதியப்பட்டது. எனினும் துனைப்பேரேட்டில் சரியாக பதியப்பட்டது.

❖ **மேற்படி தரவுகளில் இருந்து 13ம் 14ம் வினாக்களுக்கு விடை தருக.**

13. 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான திருத்த முன் கடன்பட்டோன் பேரேட்டுப்பட்டியல் மீதியும், திருத்திய பேரேட்டுப்பட்டியல் மீதியும்.

| | திருத்தமுன் பட்டியல் மீதி ரூ | திருத்திய பட்டியல் மீதி ரூ |
|---|---|---|
| 1) | 78000 | 82800 |
| 2) | 82800 | 85000 |
| 3) | 76800 | 80000 |
| 4) | 82800 | 81000 |
| 5) | 83800 | 79000 |

(……….)

14. மேற்படி பிழை தவறுகளால் தொங்கல் கணக்கு மீதியம் பிழை தவறுகளை திருத்துவதால் கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக் கணக்கில் தாக்கமும் யாது?

| | தொங்கல் கணக்கு ரூ | கட்டுப்பாட்டு கணக்கி ஏற்பட்ட தாக்கம் ரூ |
|---|---|---|
| 1) | 3000 வரவு | 4000 அதிகரிப்பு |
| 2) | 6000 வரவு | 7000 குறைவு |
| 3) | 6000 செலவு | 7000 அதிகரிப்பு |
| 4) | 3000 வரவு | 4000 அதிகரிப்பு |
| 5) | 6000 வரவு | 7000 அதிகரிப்பு |

(……….)

15. கம்சன் நிறுவனம் 1.4.2019 இல் ஆரம்பிக்கப்பட்டது 31.3.2020 முடிவடந்த நிதியாண்டில் ஒரு பகுதி பண்டங்கள் தீயினால் அழிக்கப்பட்டன இதில் 80% காப்புறுதிக் கம்பனி நட்டஈடாக தர முன்வந்தது. நிறுவனம் விற்பனை விலையில் 20% மொத்தலாபம் உழைக்கின்றது இக்காப்பகுதியுடன் தொடர்புடைய தகவல்கள்.

| | |
|---|---|
| கொள்வனவு | ரூ 264000 |
| விற்பனை | ரூ 250000 |
| வெளித் திரும்பல் | ரூ 4000 |
| 31.3.2020 இல் இருப்பு | ரூ 35000 |

தீயினால் அழிக்கப்பட்ட பொருளின் கிரயமும், தீயழிவு நட்டமும் முறையே யாது?
1) ரூ 25000, ரூ 5000 2) ரூ 20000, ரூ 4000 3) ரூ 15000, ரூ 3000
4) 18000, ரூ 3600 5) ரூ 16000, ரூ 3200 (……….)

16. ராமா நிறுவனத்தின் 31.3.2020 முடிவடைந்த காலப்பகுதியுடன் தொடர்புடைய தகவல்கள் வருமாறு.
காசாக செலுத்திய மின்சாரம் ரூ 8500
நிதியாண்டுக்கான வருமானக்கூற்றில் காட்டப்பட்ட முதலீட்டு வருமானம் ரூ 10800

| | **31.3.2020 ரூ** | **1.4.2019 ரூ** |
|---|---|---|
| சென்மதி மின்சாரம் | 3000 | 4000 |
| முற்பன முதலீட்டு வருமானம் | 4000 | 2000 |

31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக் கூற்றில் காட்டப்படவேண்டிய மின்சாரமும், காசாக பெறப்பட்ட முதலீட்டு வருமானமும் முறையே யாது?
1) ரூ 7500, ரூ 10800 2) ரூ 7500, ரூ 12800 3) ரூ 6500, ரூ 10800
4) ரூ 6800, ரூ 12800 5) 6800, ரூ 12800 (……….)

❖ நீலன் நிறுவனத்தின் 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டில் ஊழியருக்கு காசாக செலுத்திய தேறிய சம்பளம் ரூ 36000 இது ஊழியரது EPF பங்களிப்பு 10 % கழித்து வழங்கப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் 10% நிறுவனம் 15% பங்களிப்பு செய்வதும் வழக்கம் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு நிறுவனம் 5% பங்களிப்பு செய்கின்றது. ஒவ்வொரு மாதமும் EPF. ETF பங்களிப்க்கள் நிறுவனத்தால் அடுத்த மாதமே செலுத்தப்படுவது வழக்கம்.

❖ **17ம் 18ம் வினாக்களுக்கு விடை தருக**

17. ஊழியர் சார்பாக நிறுவனத்திற்கு ஏற்படும் மொத்தச் செலவு யாது?
1) ரூ 40000 2) ரூ 46000 3) ரூ 36000 4) ரூ 48000 5) ரூ 44000
(……….)

18. EPF. ETF சார்பாக 31.3.2020 இல் நிறுவனத்தின் மொத்தப் பொறுப்பு யாது?
1) ரூ 6000 2) ரூ 9000 3) ரூ 8000 4) ரூ 2000 5) ரூ 12000
(……….)

19. காந்தீஜீ விளையாட்டுக் கழகம் மாதாந்தம் ரூ 50 சந்தாக்கட்டனமாக செலுத்தும் 100 சாதாரண அங்கத்தவர்களையும் 10 ஆயள் அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. ஆயுள் அங்கத்தவர்கள் 1.4.2016 இல் இணைந்து கொண்டவர்கள் இத்தினத்திலிருந்து இவை 10 வருட வருமானமாக பகிர்ந்தளிக்கப்படும்.
1.4.2019 இல் உள்ள ஆரம்ப மீதிகள்
வருமதி சந்தா ரூ 4800 முற்பன சந்தா ரூ 3000
ஆயுள் அங்கத்தவ சந்தா கணக்கு ரூ 14000

2020 / 2021 சந்தாவில் ரூ 4000 இவ்வாண்டு பெறப்பட்டதுடன் 31.3.2020 இறுதியில் காணப்படும் வருமதி சந்தா ரூ 5000 (இதில் ரூ 1800 18/19 நிதியாண்டுக்குரிய சந்தாவும் உள்ளடங்கியுள்ளது.

31.32020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான சந்தா வருமானமும், 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டில் காசாக பெறப்பட்ட சந்தாவும் முறையே யாது?
1) ரூ 62000, ரூ 60800 2) ரூ 60000 , ரூ 60800 3) ரூ 60000, ரூ 62600
4) ரூ 62000, ரூ 62600 5) ரூ 60000, ரூ 62800 (……….)

20. பங்குடைமை தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் மிகச்சரியான கூற்றை தெரிவு செய்க.

A – பங்காளர் சேரும் போது அல்லது விலகும் போது மாத்திரமே நன்மதிப்பு மதிப்பிடப்படும்.

B – பங்காளர்கள் இடர்களை ஏற்பதற்காகவே அவர்களிற்கு இலாபம் பங்கிடப்படுகின்றது

C – பங்காளருக்கு செலுத்தவேண்டிய மூலதனவட்டி பங்குடைமையின் உரிமையை குறைக்கும்

1) A.B    2) B.C    3) A.B.C    4) B மாத்திரம்    5) A .C    (……….)

❖ **ஒரு பங்குடைமையில் புத்தன், யேசு, காந்தி என்போர் இலாபநட்டங்களை 5:32 என இலாபநட்டங்களை பகிர்வதுடன் மூலதனத்திற்கு ஆண்டுக்கு 10% வட்டியும் ஒவ்வொரு பங்காளருக்கும் ஆண்டுச் சம்பளங்காளாக முறையே ரூ 40 000, 30 000, 20 000 வழங்கப்பட வேண்டும்.**

31.03.2020 இல் காந்தி இளைப்பாளினார் புதிய இலாபநட்ட வீதம் 3:2 ஆகும்.

31.03.2021 ஆண்டுக்கான பங்காளர் பற்றுக்கள் முறையே 20 000, 10000, 5000 நன்மதிப்பு தொடர்பான

31.03.2022 சீராக்கம் பங்காளர் மூலதனக் கணக்கில் சீராக்கப்படுவதுடன் 31.3.2020 இல் காந்திக்கு செலுத்தவேண்டிய தொகை ரூ 300 000 ஆகும். பங்காளர் மூலதன கணக்கு, நடைமுறைக் கணக்கு மீதிகள் வருமாறு

| | புத்தன் ரூ | யேசு ரூ | காந்தி ரூ |
|---|---|---|---|
| 1.4.2019 இல் மூலதன கணக்கது மீதி | 400 000 | 350 000 | 250000 |
| 1.4.2019 இல் நடைமுறை கணக்கு மீதி | 40 000 | 30 000 | (20 000) |
| 31.3.2020 இல் நடமுறை கணக்கு | 125000 | 100 000 | - |

❖ **21ம், 22ம், 23ம் வினாக்களுக்கு விடை தருக.**

21. 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் யாது?

1) ரூ 250000    2) ரூ 200 000    3) ரூ 240 000    4) ரூ 300 000    5) ரூ 50000

(……….)

22. 31.3.2020 இல் நிறுவனத்தின் மொத்த நன்மதிப்பு யாது?

1) ரூ 100 000 2) ரூ 200 000    3) ரூ 300 000    4) ரூ 400 000    5) ரூ 500 000

(……….)

23. நிதியாண்டின் முடிவில் உரிமை மூலதனத்தில் ஏற்பட்ட குறைவு யாது?

1) ரூ 95 000    2) ரூ 35000    3) ரூ 300 000    4) ரூ 105 000    5) ரூ 335000

(……….)

24. வரையறுத்த ராஜ் கம்பனியின் 2021 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் வருமாறு.

1.1 மீதி    400 அலகுகள் ஒவ்வொன்றும் ரூ 10

13.1 கொள்வனவு 600 அலகுகள் ஒவ்வொன்றும் ரூ 15

25.1 விநியோகம்    ?

31.1 இருப்பு 200 அலகுகள்

நிறையளிகப்பட்ட சராசரி விலையில் **(WAC)** இருப்பு மதிப்பிடப்படுகின்றது. எனின் **LKAS 02** அமைய 31.1.2021 இல் உள்ள இருப்பும், விற்பனைக் கிரயமும் முறையே யாது?

1) ரூ 3000, ரூ 10400    2) ரூ 3000 , ரூ 10000    3) ரூ 3200, ரூ 10400

4) ரூ 2000, ரூ 10400    5) ரூ 2600, ரூ 10400    (……….)

25. வரையறுத் சுமேகா கம்பனி பெறுமதி சேர் வரிக்கு பதிவு செய்யப்பட்ட கம்பனியாகும் 1.4.2020 இல் இடம்பெற்ற பொறிகொள்வனவு தொடர்பான தகவல்கள் வருமாறு.

பொறியின் பட்டியல் விலை ரூ 500 000

பொறியை நிறுவனத்திற்கு எடுத்துவருவதற்கான போக்குவரத்துக் கட்டனம் ரூ 40000

பொறிக்கான இடத்தை தயார்படுத்தும் செலவு ரூ 30 000

நிறுவுதற் கட்டனம் ரூ 20000

முற்பரிசோதனைக் கட்டனம் ரூ 15000

பொறியை கையாளுவதற்கு ஊழியருக்கான பயிற்ச்சியளித்தல் செலவு ரூ 25000

பொறியின் வருடாந்த பராமரிப்புச் செலவு ரூ 10000

பொறிக்கான வியாபாரக் கழிவு 20% முற்பரிசோதனையின் போது உற்பத்தி செய்யப்பட்ட 50 அலகுகள் ஒவ்வொன்றும் ரூ 100 இற்கு விற்கப்பட்டன. **LKAS 16** இன் படி பொறியின் கிரயம் யாது?

1) ரூ 600 000 2) ரூ 505 000 3) ரூ 515000 4) ரூ 500 000 5) ரூ 640 000

(..........)

26. வரையறுத்த செல்வின் கம்பனியின் நிதியாண்டு ஒவ்வொரு 31.3 இலும் நிறைவடைகின்றது 1.4.2016 இல் பொறியொன்று ரூ 200 000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது இதன் இழிவுப் பெறுமதி ரூ 40000 பயன்பாட்டு ஆயுட்காலம் 8 வருடங்கள் 1.10.2019 இல் பொறியின் ஆயட்காலம் மீள மதிப்பிட்டபோது எஞ்சியது இன்னும் 2 ½ வருடங்கள் மாத்திரம் உள்ளதாக கண்டறியப்பட்டது. 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பெறுமானத் தேய்வு என்ன?

1) ரூ 20000 2) ரூ 40000 3) ரூ 38000 4) ரூ 52000 5) ரூ 64000

(..........)

27. வரையறுத்த சேயோன் கம்பனி சயந்தன் என்பவருடன் குளிர்சாதனப்பெட்டியை விற்பனை செய்வதற்கான விற்பனை ஒப்பந்தம் ஒன்றை 1.10.2019 இல் செய்துகொண்டு ஒப்பந்ததொகையாக ரூ 200 000 மொத்தமாக பெற்றுக்கொண்டது. குளிர்சாதனப் பெட்டியின் விற்பனை விலை ரூ 180 000 மாதாந்தம் ரூ 2500 வீதம் 2 வருட பராமரிப்பு சேவையை வழங்குவதற்கு உடன்பட்டது. விற்பனை ஒப்பந்தம் இடம்பெற்ற அன்றே குளிர்சாதனப்பெட்டி வாடிக்கையாளரிடம் கையளிக்கப்பட்டது. **SLFRS 15** அமைய 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கு இனம்கான வேண்டிய வருமானம்யாது?

1) ரூ 150000 2) ரூ 162 500 3) 175000 4) ரூ 200 000 5) ரூ 240 000

(..........)

28. ராமகோ பொதுக்கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கு 21.6.2020 இல் இயக்குனர்களால் அதிகாரமளிக்கப்பட்டன. 31.3.2020 இலிருந்து 21.06.2020 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகள் வருமாறு.

A – இக்காலப்பகுதிக்குள் முதலீட்டின் சந்தை விலை ரூ 100000 ஆல் வீழ்ச்சியடைந்தது.

B – 18.6.2020 இல் விபாரத்திற்கு சொந்தமான ரூ500000 நிலத்தின் ஒரு பகுதியை அரசு ரூ300000 விலையில் சுவீகரித்தல்.

C – 31.3.2020 இல் ரூ 200000 கிரயமுடைய சரக்கு 19.6.2020 இல் ரூ180000 இற்கு விற்கப்பட்டது.

D – 25.3.2020 கடனுக்கு விற்கப்பட்ட கடன் வாடிக்கையாளர் ரூ 15000 15.6.2020 இல் முறிவடைந்தார்

**LKAS 10** இன்படி 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் **சீராக்கவேண்டி நிகழ்வுகள் எவை,**

1) ABCD மாத்திரம் 2) ABD மாத்திரம் 3) BCD மாத்திரம்

4) ACD 5) CD

(..........)

❖ வரையறுத் பாலாஜி கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள் வருமாறு.

| விபரம் | ரூ 000 |
|---|---|
| விற்பனை | 7500 |
| விற்பனைக்கிரயம் | 4500 |
| நிர்வாகச்செலவு | 400 |
| மோட்டார்விற்பனைலாபம் | 200 |
| செலுத்திய பங்குலாபம் | 100 |
| காணிமீள்மதிப்பீட்டு மிகை | 400 |
| பொறிமதிப்பீட்டு பற்றாக்குறை | 200 |

31.3.2018 இல் பொறியானது ரூ 150000 ஆல் கூட்டி மீளமதிப்பிடப்பட்டிருந்தது. காணி 31.3.2020 இல் முதல்தடைவையாக கூட்டி மீளமதிப்பிடப்பிடப்பட்டது.

❖ **29ம் 30ம், வினாக்களுக்கு விடை தருக.**

29. இலங்கை கணக்கீட்டு நியமத்தினபடி 31.3.22020 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்தவருமானம், மொத்தச்செலவு எவை?

| | **மொத்தவருமானம் 000** | **மொத்தச்செலவு 000** |
|---|---|---|
| 1) | 7800 | 5400 |
| 2) | 7400 | 5500 |
| 3) | 7700 | 5000 |
| 4) | 7700 | 4900 |
| 5) | 8100 | 5100 |

(……….)

30. LKAS 1 இன்படி 31.3.2020 இல் முடிவடைந்த காலத்திற்கான இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் யாது?

| | **இலாபம் 000** | **ஏனையமுற்றுமடங்கிய வருமானம் 000** |
|---|---|---|
| 1) | 2800 | 550 |
| 2) | 2800 | 250 |
| 3) | 2750 | 400 |
| 4) | 2750 | 250 |
| 5) | 1750 | 550 |

(……….)

❖ **31 - 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையை புள்ளிகோட்டில் எழுதுக**

31. பின்வரும் கணக்கு உருப்படிகள் பொருத்தமான நிதிக்கூற்றின் மூலத்திலும் கூறுகளிலும் பட்டியலிடுக.

| **உருப்படிகள்** | **மூலம்** | **கூறுகள்** |
|---|---|---|
| A – திரண்ட பெறுமானத் தேய்வு கணக்கு | …………………… | …………………… |
| B – உத்தரவாதத்திற்கான ஏற்பாட்டு கணக்கு | …………………… | …………………… |
| C – நிதியாண்டுக்குரிய வருமானவரி செலவு | …………………… | …………………… |

32. ரூ 500000 பட்டியல் விலையில் கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பண்டங்களுக்கு 20மூ வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டதுடன் இக்கடனில் ¾ பகுதி 10% கழிவுடன் பெறப்பட்டது. இது தொடர்பில் தோன்றக்கூடிய கணக்கு மீதிகள் என்ன?

அ) விற்பனை கணக்கு ரூ ………………………………………………

ஆ) பெற்ற காசு ரூ ……………………………………………..

இ) காசுக் கழிவு ரூ ………………………………………………

ஈ) கடன்படுநர் இறுதிமீதி ரூ ………………………………………………

33. மாற்றியமைக்கப்பட் புதிய கணக்கீட்டுச் சட்டகத்தின்படி சொத்து பொறுப்பின் பண்புகள் தலா 2 தருக. சொத்து

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

**பொறுப்பு**

1) ……………………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………………

34. 10% Vat உட்பட ரூ 154000 கொள்வனவு செய்யப்பட்டபொருட்கள் முழுவதும் 10% Vat உட்பட ரூ 198000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டது. அதன்போது ரூ 5000 விளம்பரச் செலவு ஏற்பட்டது. மேற்படி சம்பவத்தால் தேறியசொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவும், பொறுமதி சேர் வரி (VAT) கணக்கு மீதியும் யாது?

அ) தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ……………………………………………………………

ஆ) பெறுமதிசேர் வரி **(VAT)** கணக்கு மீதி ……………………………………………………………..

35. பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் சொத்து, பொறுப்பு, உரிமையாண்மை, என்பவற்றின் மீது ஏற்படுத்தும் **தேறிய** தாக்கத்தினை அதிகரிப்பு (**I**) குறைவு (D) மாற்றமில்லை (**NC**) என்பவற்றின் மூலம் காட்டுக.

| **கொடுக்கல் வாங்கல்கள்** | **சொத்து** | **பொறுப்பு** | **உரிமை** |
|---|---|---|---|
| A – சென்ற நிதியாண்டில் பெறப்பட்ட முற்பனத்தொகை ரூ 25000 க்கு பதிலாக இவ்வாண்டு ரூ 15000 கிரயமான பொருட்கள் வழங்ப்பட்டன | …………. | …………. | …………. |
| B – எதிர்மாற்றல் ரூ 50000 | …………. | …………. | …………. |
| C – உட்திரும்பல் ரூ 3000 இதன் கிரயம் ரூ 2000 | …………. | …………. | …………. |

36. பின்வரும் கூற்றுக்கள் சரியா பிழையா என கூறக.

அ) 1995 ம் ஆண்டு 15ம் இல சட்டதிற்கமைய இலங்கை கணக்கீட்டு நியமக் குழு உருவாக்கப்பட்டது (……………….….)

ஆ) கடன்பட்டோரிடம் பெற்ற மறுக்கப்பட்ட காசோலைக்கான மூலப்பதிவேடு காசுக்கொடுப்பனவு நாளெடு (……………….….)

இ) விற்பனை மீதான VAT உரிமையாண்மையை அதிகரிக்கும் (……………….….)

ஈ) காசு இழப்பு காசுக்கொடுப்பனவு நாளேட்டின் ஏனைய கொடுப்பனவு நிரலில் பதியப்படும் (……………….….)

37. அபிசன் நிறுனத்தின் 2021 ஜனவரி திருத்திய காசுக்கட்டுப்பாட்டு மீதி ரூ 48000 வங்கிக்கூற்றுப்படி வங்கி மீதி ரூ 42000 ஜனவரி மாத மாற்றப்படாத காசோலை? வசூழிக்கப்படாத காசோலை ரூ 12000 நேரடிவைப்பு ரூ 5000 நிலையியற்கட்டளை காப்புறுதி ரூ 6000 வங்கிக்கட்டனம் ரூ 1000

அ) ஜனவரி மாற்றப்படாத காசோலை யாது? ரூபா ………………………………………………..

ஆ) திருத்தமுன் காசுக்கட்டுப்பாட்டு மிதி யாது? ரூபா ………………………………………………

38. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்புபடும் மிக பொருத்தமான எண்ணக்கரு.

A – சொத்துப் பயன்படுத்தல் உரிமை நிதிலைமைக்கூற்றில் சொத்தாக காட்டுதல்

B – கடன்பட்டோரை சொத்தாகவும் கடன்கொடுநரை பொறுப்பாகவும் காட்டுதல்

C – ஏற்படக்கூடிய சாத்தியமான உத்தரவாத கோரிக்கை தொடர்பில் ஏற்பாடு ஒன்று செய்யப்படல்.

D – மிககுறைந்த பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட சிறுகருவி ஐந்து ஆண்டு பயன்பாட்டை கொணடிருந்த போதும் அவை கொள்வனவு ஆண்டில. செலவாக காட்டப்பட்டது

| **விடயம்** | **எண்ணன்கரு** |
| --- | --- |
| A | ……………………………………. |
| B | ……………………………………. |
| C | ……………………………………. |
| D | ……………………………………. |

39. பங்குடைமை தொடர்பில் பின்வரும்கூற்றுக்கள் சரியா பிழையா எனகூறுக.

A – 1890 ம் ஆண்டு பங்குடைமை கட்டளைச் சட்டத்தின் 24 ம் பிரிவு படி பங்காளருக்கு சம்பளத்திற்கு உரித்தில்லை (……………………)

B – பங்காளரால் வழங்கப்பட்ட கடனுக்கு செலுத்தவேண்டிய வட்டி பங்குடைமையின் தேறியசொத்தை குறைக்கும். (……………………)

C – பங்காளர் சேரலின்போது நன்மதிப்பு மூலதனக் கணக்கினுடாக சீராக்கப்படும் நடவடிக்கை பங்குடைமையின் தேறியசொத்தை அதிகரிக்கும். (……………………)

D – பங்காளர் சேரல் அல்லது விலகலின் போது பங்குடைமையின் உரிமையாண்மை மாற்றமடயும் (……………………)

❖ **பங்குடமையில் சேரனும், சோழனும் இலாபநட்டங்களை சமனாக என பகிரும் பங்காளர்கள் பங்குடமையின் எடுகளில் உள்ள மீதிகள் வருமாறு**

| | **சேரன்** | **சோழன்** |
| --- | --- | --- |
| 1.4.2019 இல் மூலதனம் | 300 000 | 300 000 |
| 1.4.2019 இல் நடைமுறைகணக்கு | 30000 | (20000) |
| செலுத்திய மூலதனவட்டி | 12000 | 12000 |
| செலுத்திய சம்பளம் | 6000 | 4000 |
| பற்று | 3000 | 2000 |

பங்காளர்களுக்கு ½ ஆண்டு மூலதனவட்டியும், காலாண்டு சம்பளமும் காசாக செலுத்தப்பட்டது. 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம் ரூ 240 000

❖ **40ம் 41ம் வினாக்களுக்கு விடை தருக**

40. 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்னாளருக்குரிய மொத்தலாபப் பங்கு யாது?

சேரன் ரூபா ………………………………

சோழன் ரூபா ………………………………

41. 31.3.2020 இல் பங்குடமையின் உரிமையாண்மை யாது?

……………………………………………………………………………………………

42. **SLFRS 15** படி வருமானங்கள் இனம்கானப்படும் 5 படிநிலைகளும் (**5 step**) எவை?

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

3) …………………………………………………………………………………………………

4) …………………………………………………………………………………………………

5) …………………………………………………………………………………………………

♣ வரையறுத்த றியோ கம்பனி வரையறுத்த சுமோ கம்பனியிடம் 1.4.2019 இல் பொறியொன்றை ரூ 500 000 பெறுமதியில் 5 வருட குத்தகையின்கீழ் பெற்றுக்கொண்டது. உடனடிக்கொடுப்பனவாக ரூ 100000 செலுத்தப்பட்டதுடன் ஒவ்வொரு வருடமும் நிலையான தவணைக் கட்டனமாக ரூ 110 000 செலுத்தப்படும். முதலாம் இரண்டாம் நிதியாண்டுக்கான குத்தகை வட்டி முறையே ரூ 35000, ரூ 25000 ஆகும். ஆயுட்காலம் 6 வருடம்.

❖ **SLRFS 16** இற்கு அமைய **43, 44 வினாக்களுக்கு விடை தருக**.

43. அ) குத்தகையின் ஆரம்ப பொறுப்பும் யாது?

…………………………………………………………………………………………………….

ஆ) சொத்துப் பயன்படுத்தல் உரிமையை பதிவதற்கான ஆரம்ப குறிப்பேட்டுப் பதிவை எழுதுக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

44. 31.3.2020 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழும், நடைமுறையல்லாப் பொறுப்பின் கீழும் காட்டப்பட வேண்டிய குத்தகைப் பொறுப்பு யாது?

நடைமுறைப் பொறுப்பு ரூபா …………………………………………………………

நடைமுறையல்லாப் பொறுப்பு ரூபா …………………………………………………………

45. கணக்கீட்டு வேலைச் சட்டகம் அமைய நிதிக்கூற்றுக்களின் மூலங்கள் அளவிடப்படும் முறைகள் நான்கு தருக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

46. அ) வருமானச் செலவுக் கணக்கிற்கும் கொள்ளல் கொடுத்தல் கணக்கிற்கும் இடையிலான வேறுபாடுகள் 2 தருக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

ஆ) அனுமதிக்கட்டனம் தொடர்பாக காணப்படும் கணக்கீட்டு வழிமுறைகள் 2 தருக

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

47. தில்லுமுள்ளு விளையாட்டுக் கழகத்தின் ஏடுகளில் 1.4.2019 இல் காணப்படும் கணக்குகளின் மீதிகள்.

| நிகழ்வுகள் | திரண்டநிதி க.கு | கட்டிட நிதி க.கு | கொள்ளல் கொடுத்தல் | கட்டிட கணக்கு |
|---|---|---|---|---|
| 1.4.2019 இல் மீதி | 300 000 | 200000 | 120000 | 400000 |
| A கட்டிட நிதிக்கு ரூ 100000 பெறப்பட்டது. | .............. | ............... | ............... | .............. |
| B ரூ 280000 பெறுமதியில் கட்டிடம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது. | .............. | ............... | ............... | .............. |

மேற்படி நிகழ்வுகள் கணக்குகளின் மீதிகளில் ஏற்படும் தாக்கத்தை வெற்றிடத்தில் நிரப்புக

❖ வரையறுத்த நேரு கம்பனியின் ஏடுகளில் 1.4.2019 இல் உள்ள மீதிகள்
கூறபட்ட பங்குமூலதனம் ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் ரூ 480 000
நிறுத்திவைத்தலாபம் ரூ 160 000
பொதுஒதுக்கம் ரூ 100000
பொறி மறுமதிப்பீட்டு ஒதுக்கம் ரூ 30000
31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள்.

- 15.6.2019 ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் 20000 பங்குகள் உரிமை வழங்கல் செய்யப்பட்டது.
- 19/20 நிதியாண்டுக்கு மதிப்பிட்ட வருமானவரி ரூ 30000
- பொது ஒதுக்கீட்டிற்கு ரூ 30000 மாற்றப்பட்டது.
- 10.1.2020 இத்திகதியில் உள்ள ஒவ்வொரு 6 பங்குக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் பொதுஒதுக்கம் ரூ 80000 தொகையையும் மிகுதி நிறுதிவைத்தலாபத்தையும் பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டது.
- 31.3.2020 இல் ரூ 20000 இடைக்காலப் பங்குலாபமாக செலுத்தப்பட்டதுடன்.
- 31.3.2020 இல் காணி ரூ 120000 ஆல் முதல் தடைவையாக கூட்டி மீள்மதிப்பிட்டதுடன் பொறி இயந்திரம் ரூ 40000 ஆல் குறைத்து மீள்மதிப்பிடப்பட்டது. 31.3.2020 இல் நிறுத்திவைத்தலாபம் ரூ 210000

❖ **48ம், 49ம் 50ம்** வினாக்களுக்கு விடை தருக

48. 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கம்பனியின் வரிக்குமுன்லாபம் யாது?

……………………………………………………………………………………………………

49. 31.3.2020 இல் உரிமை மூலதனம் யாது?

……………………………………………………………………………………………………

50. 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்தமுற்றுமடங்கியவருமானம் யாது?

……………………………………………………………………………………………………

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| **கணக்கீடு II** | **Three Hours** | **33** | **T** | **II** |
| **Accounts II** | **Gr -13 (2021)** | | | |

### பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **40** புள்ளிகள் வீதம் இவ்வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையினை **புதிய தாளில்** ஆரம்பிக்கவும்.
- பொருத்தமான **செய்கைகள்** இணைக்கப்படுதல் வேண்டும்.
- வினாப்பத்திரத்ரை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்து கொள்வதற்கும் மேலதிக நேரத்தை பயன்படுத்துக.

***வினா இல 01***

வரையறுக்கப்பட்ட சரியோ கம்பனியின் *31.3.2020* இல் உள்ளவாறான பரீட்சைமீதி வருமாறு

| **விபரம்** | **வரவு ரூ 000** | **செலவு ரூ 000** |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் ஒவ் ரூ 13 | | 52000 |
| பொதுஒதுக்கம் | | 8000 |
| 1.4.2019 இல் நிறுத்திவைத்தலாபம் | | 10000 |
| விற்பனை | | 24000 |
| கொள்வனவு | 12000 | |
| ஊழியர் சேமலாப நிதியச் செலவு | 990 | |
| செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி | | 60 |
| சொத்துப்பயன்படுத்தல் உரிமை கணக்கு | 3000 | |
| நிர்வாகச் செலவு (ஊழியர் சேமலாப நிதியச் செலவு தவிர) | 3100 | |
| விநியோகச் செலவு | 2200 | |
| ஆரம்ப இருப்பு | 250 | |
| 1.4.2019 விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடு | | 300 |
| 1.4.2019 வருமான வரி ஏற்பாடு | | 450 |
| செலுத்திய வருமானவரி | 700 | |
| சென்மதி நிர்வாகச் செலவுகள் | | 100 |
| வியாபார வருமதி | 400 | |
| வியாபார சென்மதி | | 360 |
| 1.4.2019 வி.வருமதி எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஒதுக்கம் | | 30 |
| 1.4.2019 இல் காணி மறுமதிப்பீட்டு மிகை | | 1500 |
| ஆதனம் பொறி உபகரணங்களின் முன்கொண்டுவரும் தொகை | 44400 | |
| வங்கிக் கடன் | | 2000 |
| நிதிக்கிரயம் | 300 | |
| நீண்டகால வங்கி நிலையான வைப்பு | 4000 | |
| ஏனைய வருமானம் | | 600 |
| ஏனைய செலவு | 1020 | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 27040 | |
| | **99400** | **99400** |

**மேலதிக தகவல்கள் :**

01. *31.3.2020* இல் உள்ளபடியான இருப்பின் கிரய விபரம் வருமாறு.

| இருப்பின் வகை | கிரயம் 000 | தேறிய தேறத்தக்க பெறுமதி 000 |
|---|---|---|
| XY | *120* | *110* |
| YY | *180* | *185* |
| YZ | *130* | *125* |
| **மொத்தம்** | ***430*** | ***420*** |

இருப்புக்கள் அலகுரீதியாக மதிப்பிடப்படுகின்றது.

02. கம்பனியின் வேலைகொள்வோர், ஊழியர் என்போர் ஊ.சே.நி (EPF) பங்களிப்பு முறையே 15%. 10% மேலும் வேலைகொள்வோர் ஊ.ந.நி (ETF) இற்கு 5% பங்களிப்பு செய்கின்றார் இக்கம்பனி நடைமுறையாண்டிற்கான இறுதி மாத ஊ.சே.நி, ஊ.ந.நி என்பவற்றிற்கு எதவித ஏற்பாடும் மெற்கொள்வில்லை. எவ்வாறாயினம் இறுதி மாதத்துக்கான ஊழியர்களது ஊ.சே.நி (EPF) பங்களிப்பு குறைத்தக்கொள்ளப்பட்டு ஊ.சே.நி கணக்கில் செலவில் பதியப்பட்டுள்ளது.

03. *31.3.2020* இல் ஆதனம் பொறி உபகரணம் தொடர்பான மீதிகள் வருமாறு.

| சொத்துக்கள் | ஆயுட்காலம் | கிரயம்/மதிப்பிட்ட பெறுமதி | தி.பெ.தே.ஒ | முன்.கொ.தொகை |
|---|---|---|---|---|
| | | ***ரூபா 000*** | ***ரூ 000*** | ***ரூ 000*** |
| காணி | - | *15000* | - | *15000* |
| கட்டிடம் | *80* | *40000* | *13000* | *27000* |
| மோட்டர் வாகனம் | *15* | *6000* | *3600* | *2400* |
| | | *61000* | *16600* | *44400* |

04. மோட்டார் வாகனம் பொருள் விநியோகத்திற்கு பயன்படுவதுடன். ஏனைய சொத்துக்கள் நிர்வாக தேவைக்கு பயன்படுத்தப்படுகின்றது. மேற்படி சொத்துக்களுக்கு நேர்கோட்டு முறையில் இவ்வாண்டு பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்குகளில் முறையாக பதியப்பட்டது.

05. காணி *31.3.2020* இல் ரூ *13000 000* பெறுமதியில் மதிப்பிடப்பட்டதுடன் *31.3.2020* இல் கட்டடிடம் ரூ *30 000 000* பெறுமதியில் மதிப்பிட்டதுடன் இவ்வாண்டுக்கான மறுமதிப்பீடு தொடர்பில் பதிவுகள் எவையும் ஏடுகளில் இடம்பெறவில்லை.

06. *1.4.2019* இல் கட்டிடத்தின் ஆயட்காலம் மீள்மதிப்பிடப்பட்டது. இத்தினத்திலிருந்து இதன் எஞ்சிய ஆயுட்காலம் *50* ஆண்டுகள்மாத்திரம் உள்ளதுடன் மோட்டாரின் ஆயுட்காலம் *1.4.2019* இல் இருந்து இன்னும் *5* ஆண்டுகள் மாத்திரம் உள்ளதாக மதிப்பிடப்பட்டது. இம் மாற்றம் எதுவும் கவனத்தில் கொள்ளப்படாது. இவ்வாண்டுக்கான பெறுமானத் தேய்வுக்கு கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

07. *1.10.2019* இல் நிறுவனத்தில் உள்ள மோட்டார் வாகனம் ரூ *4000 000* விலையில் காசுக்கு விற்கப்பட்டதுடன், *1.1.2020* இல் புதிய மோட்டார் ரூ *4000 000* இற்கு கொள்வனவு செய்யப்பட்டது இதன் ஆயுட்காலம் *8* வருடங்கள் பழைய மோட்டார் வாகனத்தின் விற்பனை விலை காசுக் கணக்கில் வரவிலும் விற்பனைக் கணக்கில் செலவிலும் பதியப்பட்டதுடன் புதிய மோட்டாரின் கொள்வனவு காசுக் கணக்கில் செலவிலும் கொள்வனவு கணக்கில் வரவிலும் பதியப்பட்டதை தவிர இக்கொள்வனவு விற்பனை தொடர்பில் வேறு பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.

08. 31.3.2020 இல் வியாபார வருமதிகளில் 10% சமனாக எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படி ஓதுக்கத்தை சீராக்குக.

09. 18/19 நிதியாண்டின் வருமான வரிக்கு ரூ 520 000 இணங்கப்பட்டு செலுத்தப்பட்டதுடன். 19/20 நிதியாண்டின் வருமானவரிக்கு ரூ 600 000 மதிப்பிடப்பட்டது.

10. விற்பனை 6 மாத உத்தரவாத அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றது சென்றான்டு உத்தரவாதம் தொடர்பில் இவ்வாண்டில் செலுத்தப்பட்ட ரூ 280 000 விநியோகச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 31.3.2020 விற்பனை உத்தரவாதத்திற்கான ஏற்பாடாக இவ்வாண்டு விற்பனையில் ரூ 360 000 ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

11. கம்பனியானது பொருட்களை விற்பனை செய்வதற்கும் ஒரு வருட பராமரிப்புச் சேவையை வழங்குவதற்குமான ஒப்பந்தம் ஒன்றில் 1.1.2020 இல் ஈடுபட்டது இவ் ஒப்பந்தத்தின் மொத்த கைமாறு ரூ 1200 000 ஆகும் பொருளின் விற்பனை விலை ரூ 900 000, ஒரு வருட பராமரிப்புச் சேவைக்கு ரூ 600 000 ஆகும். ஒப்பந்தம் செய்யப்பட்ட தினத்திலேயே கைமாற்றுத் தொகை முழுவதும் பெறப்பட்டதுடன், பொருட்களும் விற்பனை செய்யப்பட்டன. ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட தொகை முழுவதும் காசுக்கட்டுப்பாட்டு கணக்கிற்கு வரவிடப்பட்டு விற்பனை கணக்கிற்கு செலவிடப்பட்டதை தவிர வேறு பதிவுகள் எவையும் இடம்பெறவில்லை.

12. 12. கம்பனி 1.4.2019 இல் உபகரணமொன்றை 3 வருட குத்தகையில் கொள்வனவு செய்தது. உடனடிக் கொடுப்பனவாக ரூ 1000 000 செலுத்தப்பட்டதுடன். வருடாந்தம் நிலையான தவனைக்கொடுப்பனவாக வட்டி உட்பட வருட இறுதியில் ரூ 2000 000 செலுத்தப்படும். இவ்வாண்டுக்கான தவனைக்கட்டனமும், உடனடிக்கொடுப்பனவும் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து சொத்துப் பயன்படுத்தல் உரிமைக் கணக்கிற்கு வரவிடப்பட்டதை தவிர வேறுபதிவுகள் எவையும் இடம்பெறவில்லை. உபகரணத்தின் பெறுமானத்தேய்வு 10% குத்தகை வட்டி 10% மூன்று ஆண்டிற்கான கழிவிடல் வீதம்

| ஆண்டு | கழிவிடல் வீதம் |
|---|---|
| 19/ 20 | 0.9 |
| 20/21 | 0.8 |
| 21/22 | 0.7 |

13. 1.4.2019 இல்காணப்படும் ஒவ்வொரு பத்துப் பங்குக்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் ரூ 10 விலையில் நிறுத்திவைத்தலாபத்தை பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டதுடன் பொது ஒதுக்கீட்டிற்கு ரூ 100 000 மாற்றப்பட்டது.

**வேண்டப்படுவது**

LKAS 1 இன்டிபடி பிரசுரிக்கத்தக்க வகையில் பின்வரும் நிதிக் கூற்றுக்கள்.

1) 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் முற்றுமடங்கிய வருமானக் கூற்று
2) 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான உரிமை மாற்றக் கூற்று
3) 31.3.2020 இல் உள்ளபடி நிதி நிலைமைக் கூற்று

(மொத்தம் 40 புள்ளிகள்

**வினா இல 02**

1.1.2021 இல் ரூ 10 000 000 தொகையை மூலதனமாக இட்டு ஆரம்பிக்கப்பட்ட சாது நிறுவனத்தின் தனது அனைத்து கொடுக்கல் வாங்கல்களைவ வங்கிக் நடைமுறைக் கணக்கினுடாக மேற்கொள்ளுகின்றார் ஜனவரி மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல் வருமபறு

| | ரூபா 000 |
|---|---|
| **காசு, காசோலை பெறுவனவு** | |
| மூலதனம் | 10 000 |
| காசு விற்பனை | 6000 |
| கடன்பட்டோரிடம் பெற்றது | 3000 |
| விற்பனைக்காக பெறப்பட்ட முற்பனம் | 2000 |
| **காசோலைக் கொடுப்பனவு** | |
| மூலப்பொருள்கொள்வனவு | 1200 |
| கடன்கொடுநருக்கான கொடுப்பனவு | 800 |
| நேர்கூலி | 200 |
| மூலப்பொருள் கொள்வனவுக்கான முற்பனக்கொடுப்பனவு | 300 |
| விநியோகச் செலவு | 200 |
| தொழிற்சாலை வாடகை | 120 |
| தொழிற்சாலை மின்சாரம் | 80 |
| 15.1.2021 பொறி இயந்திரக்கொள்வனவு | 800 |

**ஏனைய தகவல்கள்**

1. ஜனவரி மாதத்திற்கான மூல ஏடுகளின் மொத்தம் வருமாறு

| | ரூபா 000 |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு நாளேடு | 1500 |
| விற்பனை நாளேடு | 5000 |
| உட்திரும்பல் நாளேடு | 200 |
| வெளித்திரும்பல் நாளேடு | 100 |

2. 31.3.2021 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கு செலுத்தப்பட்ட தொகையை வாடகை குறிக்கும்.
3. கடன்கொடுநருக்கு வழங்கப்பட்ட ரூ 600 000 காசோலை 31.1.2021 வரை வங்கியில் சமர்ப்பிக்கப்படாதுள்ளதுடன்., கடன்பட்டோரிடம் பெறப்பட்ட ரூ 800 000 காசோலை 31.1.2021 வரை வசூழிக்கப்படவில்லை.
4. கடன்பட்டோரிடால் நேரடியாக வைப்பிலிட்ட ரூ 1000 000 காசோலையும், வங்கியால் வசூழித்த முதலீட்டு வருமானம் ரூ 900 000 மும் வங்கிக் கட்டனம் ரூ 200 000 காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.
5. முற்பன விற்பனை தொடர்பில் இம் மாதத்தில் ரூ 1800 000 பெறுமதியான பொருட்கள் மாத்திரம் வழங்கப்பட்டதுடன் மூலப்பொருள் முற்பனக்கொடுப்பனவில் ரூ 200 000 மூலப்பொருட்கள் மாத்திரம் இம்மாதத்தில் பெறப்பட்டது.
6. பொறியின் இழிவுப் பெறுமதி ரூ 80 000 பயனுள்ள ஆயட்காலம் 6 வருடம்
7. ஜனவரி மாதத்திற்காக பெப்ரவரி 10ம் திகதி கிடைக்கப் பெற்ற மின்சாரப்பட்டியல் ரூ 120000
8. 31.1.2021 இல் மீதிகள்

   மூலப்பொருள் ரூ 520 000

   முடிவுப்பொருள் ரூ 320 000

**வேண்டப்படுவது**

**அ)**

1. காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு, காசுக் கொடுப்பனவு நாளேடு
2. பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்
   காசுக் கட்டுப்பாட்டு கணக்கு விற்பனை கணக்கு, மூலப்பொருள் கொள்வனவுக் கணக்கு கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு முற்பன விற்பனை பெறுவனவு கணக்கு, முற்பன மூலப்பொருள் கொடுப்பனவு கணக்கு
3. 2021 ஜனவரி மாதத்திற்கான உற்பத்திக் கிரயக்கூற்றும், வருமானக் கூற்று.

(30 புள்ளிகள்)

ஆ) 1. ஜனவரி மாத திருத்திய காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு

2. ஜனவரி மாத வங்கிக் கணக்கிணங்க கூற்று

(10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

**வினா இல 03**

புடைவை விற்பனை செய்யும் அபிராமி நிறுவனத்தின் 1.1.2021 இல் உள்ள நிதிநிலைமைக்கூற்று வருமாறு

| விபரம் | தொகை | தொகை | தொகை |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்து** | | | |
| ஆதனம்பொறி உபகரணம் | 600000 | (120000) | 480000 |
| **நடைமுறைச்சொத்து** | | | |
| புடைவை கையிருப்பு | | 120000 | |
| கடன்பட்டோர் | | 180000 | |
| முற்கொடுப்பனவும் முற்பனச் செலவும் | | 50000 | |
| காசு | | 100000 | 4500000 |
| | | | **930000** |
| **உரிமையாண்மை** | | | |
| மூலதனம் | | 500000 | |
| நிறுத்திவைத்தலாபம் | | 250000 | 750000 |
| **நடைமுறையல்லாப்பொறுப்பு** | | | |
| 12மூ வங்கிக்கடன் | | | 100000 |
| **நடைமுறைப்பொறுப்பு** | | | |
| கடன்கொடுநா | | 50000 | |
| முற்பனமாக பெற்றது | | 25000 | |
| சென்மதி சம்பளம் | | 5000 | 80000 |
| | | | **930000** |

**2021 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள வருமாறு**

1. ரூ 120000 புடைவைகள் கொள்வனவு செய்யப்பட்டது இதில் 1/4 பகுதி காசோலை மூலம் செலுத்தப்பட்டதுடன் மிகுதி கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
2. ரூ 80000 கிரயமான புடைவைகள் ரூ 200000 பட்டியல் விலையில் கடனுக்கு விற்கப்பட்டது.
3. வியாபாரக்கழிவு 20%
4. கடன்பட்டோனால் திருப்பியது ரூ 16000 இதன் கிரயம் ரூ 8000
5. மே மாதத்திற்கு கிடைக்கப்பட்ட மின்சாரப்பட்டியல் ரூ 4000
6. 15.1.2021 இல் மோட்டார் ரூ 100 000 வங்கிக்கடன் மூலம் பெறப்பட்டது.
7. சிறுவர் இல்லம் ஒன்றுக்கு ரூ 12000 கிரயமான புடைவைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

8. இம்மாதம் செலுத்தப்பட்ட ரூ 15000 காப்புறுதியில் நிறுவனத்தின் ஜனவரி மாதத்திற்கான ரூ 5000
9. அடுத்தமாதத்திற்குரிய ரூ 5000 மும் மிகுதி உரிமையாளரின் தனிப்பட்ட ஆயுட்காப்புறுதியும்
10. உள்ளடங்கியுள்ளது.
11. ஜனவரி மாதத்தில் ரூ 80000 புடைவைகள் விற்கப்பட்டன 1.1.2021 இல் பெற்ற முற்பனம் இவ் விற்பனை சார்பாக சென்ற மாதம் பெறப்பட்டதை குறிக்கும் மிகுதி இம் மாதம் காசாக பெறப்பட்டது வழங்கப்பட்ட புடைவைகளின் கிரயம் ரூ 50000
12. இம்மாதம் ரூ 60000 புடைவைகள் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்காக ரூ 40000 சென்றமாதம் செலுத்தப்பட்டது மிகுதி இம்மாதம் செலுத்தப்பட்டது.
13. முன்னைய மாதத்தில் பதிவளிக்கப்பட்ட ரூ 10000 வியாபார வருமதி இம்மாதம் பெறப்பட்டது
14. ஆதனம்பொறி உபகரணத்திற்கு பெறுமானத் தேய்வுக்கு ஆண்டுக்கு 12மூ தேய்விடுக
15. ஜவனவரி மாத வாடகை ரூ 20000 இதில் ரூ 10000 சென்ற மாதம் செலுத்தப்பட்டது மிகுதி இம்மாதம் செலுத்தப்பட்டது.
16. சென்ற மாத சென்மதி சம்பளம் முழுவதும் செலுத்தப்பட்டதுடன் இம்மாதத்திற்குரிய சென்மதி சம்பளம் ரூ 5000
17. வணிகத்தின் விளம்பரச் செலவு ரூ 6000 உரிமையாளரின் தனிப்பட்ட பணத்திலிருந்து செலுத்தப்பட்டது.
18. இம்மாதம் அழிவடைந்த புடைவைகள் ரூ 20000 இதில் ரூ 18000 காப்புறுதி நிறுவனம் நட்டஈடாக தரமுன்வந்தது.

நிறுவனம் உழைத்துக்கொள்ளும் இலாபத்தை ஊழியர் சேமலாபநிதியக் கணக்கில் பேனுகின்றது.

**வேண்டப்படுவது**

1. 1.5 உள்ள மீதி உட்பட 15 கொடுக்கல்வாங்கல்களையும் கீழ்வரும் சமன்பாட்டில் பதிவு செயது காட்டுக.
2. ஆதனம்பொறி + இருப்பு + வியாபாரவருமதி + ஏனைய வருமதி + காசு = மூலதனம் + வியாபார சென்மதி + ஏனைய சென்மதி + வங்கிக்கடன் + நிறுத்திவைத்தலாபம்
3. (ஏனைய வருமதி முற்கொடுப்பனவுகளையும், வருமதி வருமானங்களையும் உள்ளடக்கியதுடன) (ஏனைய சென்மதி முற்பன வருமானங்களையும், சென்மதி செலவினங்களையும் உள்ளடக்கியது)
4. 2021 ஜனவரி மாதத்திற்கான வருமானக்கூற்று
5. 31.1.2021 இல் நிதி நிலைமைக் கூற்று

(40 புள்ளிகள்)

**வினா இல 04**

அ) பங்குடைமையொன்றில் மல்லிகை, முல்லை, ரோஜா என்போர் இலாபநட்டங்களை 5:3:2 எனப் பகிரும் பங்காளர்கள் இப்பங்குடைமையிலிருந்து 1.4.2019 இல் முல்லை இளைப்பாற மல்லிகையும் ரோஜாவும் இலாபநட்டங்களை 3:2 என பகிர்வு செய்து கொண்டு பங்குடைமையை தொடர்ந்தனர் புதிய பங்குடைமை உடன்படிககைக்கமைய மூலதன மீதிகளுக்கு ஆண்டுக்கு 10% வட்டியும், மல்லிகைக்கும் ரோஜாவுக்கும் மாதாந்த சம்பளமாக ரூ 50000 வழங்கப்பட வேண்டும். முல்லை இளைப்பாறும் போது அவருக்கு செலுத்தவேண்டிய மொத்தம் ரூ 1300 000 இது 10% கடன்கணக்கிற்கு மாற்றப்பட்டது. நன்மதிப்பு தொடர்பான சீராக்கத்தை பங்காளர் மூலதனக் கணக்கினுடாக மேற்கொள்க.

*31.3.2020, 1.4.2019* இல் உள்ள சில மீதிகள்

| | ***31.3.2020 ரூ 000*** | ***1.4.2019 ரூ 000*** |
|---|---|---|
| பங்காளர் மூலதனம் | | |
| மல்லிகை | *?* | *1200* |
| முல்லை | *?* | *800* |
| ரோஜா | *?* | *600* |
| பங்காளர் நடைமுறைக் கணக்கு | | |
| முல்லிகை | *?* | *200* (செலவு) |
| முல்லை | *?* | *100* (வரவு) |
| ரோஜா | *?* | *50* (செலவு) |
| வியாபாரவருமதி | *400* | *300* |
| வியாபார சென்மதி | *300* | *200* |
| இருப்பு | *500* | *400* |
| முற்பன செயற்பாட்டு செலவு | *40* | - |
| அட்டுறு செயற்பாட்டுச் செலவு | - | *60* |

*31.3.2020* இல் முடிவடைந்த மாதத்திற்கான காசுக் கொடுக்கல் வாங்கல் வருமாறு

| | ***ரூ 000*** |
|---|---|
| கடன்பட்டோரிடம் பெற்றது | *10400* |
| கடன் கொடுநருக்கு செலுத்தியது | *5600* |
| செயற்பாட்டுச் செலவு | *1200* |

**மேலதிக தகவல்**

1. மல்லிகையும், ரோஜாவும் மூன்று மாத சம்பளங்களை காசாக எடுத்திருந்தனர் இவை செயற்பாட்டுச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
2. ஆதனம் பொறி உபகரணங்களின் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு ரூ *120 000* ஆகும்
3. மல்லிகை ஆண்டு காலத்தில் ரூ *50 000* பண்டங்களை பற்றினார்
4. ரேஜாவால் தனது சொந்தப் பணத்திலிருந்து ஆண்டு காலத்தில் பங்குடைமைக்கு செலுத்திய விளம்பரச் செலவு ரூ *60 000* பற்றிய பதிவுகள் இடம்பெறவில்லை.
5. மல்லிகையின் மகனின் பாடசாலை கட்டனத்திற்கு பங்குடமையிலிருந்து செலுத்தப்பட்ட ரூ *40000* காசு பங்குடைமையின் செயற்பாட்டுச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது**

1) *31.3.2020* இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக்கூற்றும், பகிர் கணக்கும்
2) *31.3.2020* இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான பங்காளர் நடைமுறைமுறை கணக்கும் மூலதனக் கணக்கும்
3) முல்லை கடன் கணக்கு

(*20* புள்ளிகள்)

ஆ) 31.3.2020 இல் சக்தி விளையாட்டுக் கழகத்தின் வருமானக்கூற்று வருமாறு

| **வருமானம்** | | |
|---|---|---|
| சந்தாக் கட்டனம் | | 80000 |
| நுழைவுக்கட்டனம் | | 20000 |
| புத்தகசாலை விற்பனை | | 120000 |
| விளையாட்டு உபகரண நன்கொடை | | 50000 |
| | | 270000 |
| செலவுகள் | | |
| பெறுமானத் தேய்வு | 12000 | |
| புத்தகசாலையின் கிரயம் | 60000 | |
| புத்தகசாலை ஊழியர் சம்பளம் | 24000 | |
| கழக வாடகை | 14000 | |
| மின்சாரம் | 10000 | (120000) |
| மிகை | | 150000 |

31.3 இல் உள்ள நிதிநிலைமைக்கூற்று வருமாறு

| | 31.3.2020 | 1.4.2019 |
|---|---|---|
| ஆதனம்பொறி உபகரணம் முன்கொண்டுசெல்லும் பெறுமதி | 218000 | 180000 |
| புத்தக சாலை இருப்பு | 24000 | 32000 |
| வருமதி சந்தா | 4000 | 6000 |
| காசு | 222000 | 69000 |
| | **468000** | **287000** |
| திரண்ட நிதி | 400000 | 250000 |
| விளையாட்டு உபகரண நிதி | 30000 | - |
| புத்தகசாலை கடன்கொடுநர் | 30000 | 28000 |
| முற்பணஒப்பப்பணம் | 2000 | 5000 |
| நின்ற சம்பளம் | 4000 | 3000 |
| நின்ற மின்சாரம் | 2000 | 1000 |
| | 46800 | 287000 |

**மேலதிக தகவல்**

1) பெறுமானத்தேய்வில் ½ பகுதி புத்தகசாலைக்குரியது
2) ஆண்டு காலத்தில் விளையாட்டு உபகரணத்திற்கு ஒரு பகுதி நன்கொடை காசாக பெறப்பட்டது ஆண்டு காலத்தில் கொள்வனவு செய்யபட்ட விளையாட்டு உபகரணம் முழுவதும் இதனைப் பயன்படுத்தியே பெறப்பட்டது.
3) பேறப்பட்ட நன்கொடைகள் அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் வருமானமாக கருதுவது கழகத்தின் கொள்கையாகும்.

**வேண்டப்படுவது**

1) புத்தகசாலை வருமானக்கூற்று
2) கொள்ளல் கொடுத்தல் கணக்கு

(20 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)

**வினா இல 05**

அ) வரையறுத்த பொத்துவில் கம்பனியின் கடன்பட்டோன் தொடர்பான தகவல்கள் வருமாறு.

1) 1/1/2021 இல் கடன்பட்டோர் பேரேட்டு மீதி

*மாறன் ரூபா 12000*

*மரதன் ரூபா 15000*

*மலரவன் ரூபா (5000)*

*மகிந்தன் ரூபா 10000*

2) ஜனவரி மாத விற்பனை நாளேடு

| **விபரம்** | **தொகை** |
|---|---:|
| *மாறன்* | *25000* |
| *மரதன்* | *38000* |
| *மலரவன்* | *32000* |
| *மகிந்தன்* | *15000* |
| மொத்தம் | *110000* |

3) ஜனவரி மாத உட்திரும்பல் நாளேடு

| **விபரம்** | **தொகை** |
|---|---:|
| *மாறன்* | *1000* |
| *மரதன்* | *3000* |
| *மலரவன்* | *2000* |
| *மகிந்தன்* | *5000* |
| மொத்தம் | *11000* |

4) காசுப் பெறவனவு தொடர்பான தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| மாறன் | மாத இறுதியல் வருமதியான தொகையில் 2/3 பகுதி 10% கழிவு தள்ளி பெறப்பட்டது. |
| மரதன் | மாத இறுதியல் 4/5 பகுதி 8% கழிவு தள்ளி பெறப்பட்ட பின்னர் மிகுதியில் ரூ *2000* அறவிடமுடியாக்கடன் பதிவளிக்கப்பட்டது |
| மலரவன் | இம் மாத தேறிய விற்பனையில் 2/3 பகுதிக்கு 15% கழிவு தள்ளி காசோலை பெறப்பட்டது. |
| மகிந்தன் | ரூபா *4000* வட்டி விதிக்கப்பட்ட பின்னர் ரூபா வருமதியான தொகையில் ¾ பகுதி 5% கழிவு தள்ளி பெறப்பட்டது. |

**வேண்டப்படுவது**

1) *2021* ஜனவரி மாதத்திற்கான பொதுப்பேரேட்டில் கடன்பட்டோன் கட்டுப்பாட்டு கணக்கு

2) *2021* ஜனவரி மாதத்திற்கான துனைப்பேரேட்டில் வேண்டிய கணக்குகள்

3) *2021* ஜனவரி மாதத்திற்கான கடன்பட்டோன் பேரேட்டுப்பட்டயல்

*(25 புள்ளிகள்)*

ஆ) வரையறுத்த பொத்துவில் கம்பனி வரையறுத்த பொலிகண்டி கம்பனியிடம் ரூ 800000 கொள்விலையில் பொறியொன்றை குத்தகை அடிப்படையில் 1.4.2018 இல் கொள்வனவு செய்தது. இதன் வருடாந்த நிலையான

நிலையான தவணைக்கட்டனம் வட்டி உட்பட ரூ 200000

குத்தகை தவணைக் காலம் 5 வருடம்

ஆரம்பவைப்பு ரூ 100000

ஒவ்வொரு தவணைக்கட்டனமும் வருட இறுதியில் செலுத்தப்படும்.

குத்தகை வட்டி 20%

குத்தகை காலத்தை அடிப்படையாக்கொன்டு பெறுமானத்தேய்விடப்படும்

**வேண்டப்படுவது**

1) பொத்துவில் கம்பனியின் ஏட்டில் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான குத்தகை தொடர்பான குறிப்பேட்டுப் பதிவுகள்
2) பொத்துவில் கம்பனியின் ஏட்டில் முதல் இரண்டு ஆண்டுக்கான குத்தகை தொடர்பான பேரேட்டுக்கணக்குகள்
3) 31.3.2020 இல் நிதிநிலைமைக்கூற்றில் குத்தகைப் பொறுப்பு தொடர்பாக நடைமுறைப் பொறுப்பிலும் நடைமுறையல்லாப் பொறுப்பிலும் காட்டப்படும் மீதிகள்
4) 31.3.2020 இல் வருமானக் கூற்றில் குத்தகை தொடப்பான செலவுகள்

(15 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

**வினா இல 06**

அ) வரையறுத்த சொக்கோ கம்பனியின் ஏடுகளில் 1.4.2019 இல் உள்ள மீதிகள் வருமாறு

| | ரூபா 000 |
|---|---|
| ஒவ்வொன்றும் ரூ 15 வான கூறப்பட்ட பங்கு மூலதனம் | 6000 |
| பொது ஒதுக்கம் | 1500 |
| நிறுத்திவைத்தலாபம் | 2500 |
| காணி மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | 300 |
| காணி | 1800 |
| கட்டடிம் (கிரயம்) | 2200 |
| மோட்டார் (கிரயம்) | 1300 |
| திரண்ட பெறுமானத் தேய்வு - கட்டிடம் | 400 |
| - மோட்டார் | 500 |

31.3.2020 இல் முடிவடைந்த வருடத்திற்கான சில தகவல்கள் வருமாறு

2019 மே – ஒவ்வொன்றும் ரூ 15 விலையில் 40000 பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கி பணம் பெற தீர்மானிக்கப்பட்டது. இக்கம்பனிக்கு பின்வரும் இடங்களில் இருந்து விண்ணப்பத்துடன் பணம் பெறப்பட்டு அவை பின்வருமாறு பகிரப்பட்டன

| இடங்கள் | பெறப்பட்ட விண்ணப்பம் | பகிரப்பட்ட அடிப்படை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 8000 | முழுவதும் நிராகரிக்கப்பட்டது |
| கொழும்பு | 12000 | முழுமையாக்கப்பட்டது |
| கண்டி | ? | 9 : 7 என்ற விகிதாரத்தில் பகிரப்பட்டு எஞ்சியது நிராகரிக்கப்பட்டது |

2019 யூலை – காணி ரூ 1400 000 ஆக மீள் மதிப்பிடப்பட்டது

2019 ஒக்ரோபர் – புதிய மோட்டர் ரூபா 500 000 இற்கு 1.10.2019 கொள்வனவு செய்யப்பட்டது

2019 டிசம்பர் – பொது ஒதுக்கீட்டிற்கு ரூ 200 000 மாற்றப்பட்டது

2020 ஜனவரி – 1.1.2020 இல் மோட்டார் ஒன்று ரூ 320 000 விற்கப்பட்டது இம் மோட்டார் 1.7.2016 இல் ரூ 400 000 கொள்வனவு செய்யப்பட்டது.

2020 பெப்ரவரி – செலுத்திய இடைக்காலப் பங்குலாபம் ரூ 1000 000

2020 மார்ச் – ஒவ்வொன்றும் ரூ 12 விலையில் 10000 பங்குகள் நிறுத்திவைத்த லாபத்தை பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டது.

2020 மார்ச் – 31.3.2020 இல் கட்டிடம் ரூ 1500 000 பெறுமதியில் மீள் விலையிடப்பட்டது.

ஆதனம் பொறி உபகரணம் அனைத்தும் வருடாந்தம் 10% தேய்விடப்படுவதுடன் 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலாபம் ரூ 2100 000 ஆகும்.

**வேண்டப்படுவது**

1) 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான உரிமையாண்மை மாற்றக் கூற்று
2) 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான ஆதனம்பொறி உபகரன அசைவுக் கூற்று
3) 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மோட்டர் அகற்றல் கணக்கு
4) 2019 மே, 2019 யூலை, 2020 மார்ச் மாதங்களில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்களுக்கான நாட்குறிப்பு பதிவுகள்
5) 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம் யாது?
6) 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டில் உரிமை மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது?

(26 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த X கம்பனி 1.10.2019 இல் குளிரூட்டி ஒன்றினை 2 வருட பராமரிப்பு சேவையுடன் சேர்த்து ரூ 160000 இற்கு வாடிக்கையாளருடன் ஒப்பந்தம் செய்து முழுப்பணத்தையும் பெற்றுக்கொண்டது குளிரூட்டியின் விலை ரூ 150 000 இருவருட பராமரிப்பு சேவை வருமானம் ரூ 50000 எனின்

**வேண்டப்படுவது.**

**SLFRS 15 அமைய பின்வரும் வினாக்களுக்கு வடைதருக**

1) கொடுக்கல் வாங்கல் விலை யாது?
2) 31.3.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானம் யாது?
3) 31.3.2020, இல் முடிவடைந்த ஆண்டுக்கான நாட்குறிப்பு பதிவுகள்
4) 31.3.2020, நிதிநிலைமைக்கூற்றில் முற்பன வருமானம் யாது?

(14 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)